# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,914—1970 ජූලි 10 වැනි සිකුරාදා—1970.7.10**

14,914 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூலை மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 571 | ஏலவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | 586 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 580 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 582 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 586 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்கும் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் விதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத விதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத விதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவிதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத விதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்**
**அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகக் கந்தோர்,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 14 ந் உ.

---

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.பொ.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், இயக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல : *A*.67/*X*.2250/69.

## தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

### தரவு ஒழுங்குபடுத்தும் முகாமையாளர் பதவி

*தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தில் தரவு ஒழுங்குபடுத்தும் முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களிலான விண்ணப்பங்கள் பின்வரும் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. இல. 500, கொழும்பு, எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். :—*

(அ) *உள்ளூர் விண்ணப்பங்கள்* : 1970.7.24.

(ஆ) *வெளியூர் விண்ணப்பங்கள்* : 1970.7.31

**குறிப்பு.**—

(i) *அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் சொந்த முகவரியிட்ட 9" × 4" அளவிற்குக் குறையாத "முத்திரையிடாத" கடிதவுறையொன்றை அனுப்புவதோடு விண்ணப்பக்காரராக விரும்புபவர் அரசாங்க சேவையிலுள்ளவரா, அல்லாதவரா என்பதையும் மிகத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.*

(ii) *விண்ணப்பப்படிவம் அல்லது அப்படிவம் தொடர்பான கடிதம் தபாலில் தவறிவிட்டதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித்தினம் வரையும் தாமதிப்போர் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.*

(iii) *வெளியூர் விண்ணப்பக்காரர்கள் அச்சிட்ட விண்ணப்பப்படிவங்களை நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பின் விண்ணப்பப்படிவங்களை விதித்த கால எல்லைக்குள் தாம் வதியும் நாட்டுக்குரிய அல்லது அதற்கு மிகக் கிட்டிய நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு அனுப்பி அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்புமாறு செய்விக்கலாம்.*

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்** :—*இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்குத் தெரிவுசெய்த வெளிநாட்டிலுள்ள இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்கேற்ற உடல்நலமுடையவர்களாவென்பதை உத்தியோகத்தர் உறுதிப்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பயிற்சியாளரிடம் மருத்துவச் சோதனை பெறுவதற்குச் சமுகமளிக்க வேண்டும். அத்தகைய மருத்துவச் சோதனைக்கான கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான செலவையும் அவ்வுத்தியோகத்தர்களே கொடுக்கவேண்டும்.*

2. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்** :—*பதவி நிரந்தரமானதும் உபகாரச்சம்பளமுடையதுமாகும். ஆண் அபேட்சகர்கள் நியமிக்கப்படும் திகதியிலிருந்து மூவாண்டுகாலம் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். பெண் அபேட்சகர்கள் முதலில் சகாயநிதி அடிப்படையிற் நியமிக்கப்பட்டு நியமனத்திகதியிலிருந்து மூவாண்டு காலம் பரீட்சை*

நிலையிலிருப்பர். இவர்கள் பத்தாண்டு காலச் சேவை முடிவடையுமுன் எக்காலத்திலாவது உபகாரச்சம்பள முறையில் சேர்ந்து கொள்ளும் உரிமையுடையவராவர். ஒரு முறை அவ்விருப்புரிமையைப் பிரயோகித்துக் கொண்ட பின்னர் அதை நிராகரிக்கவியலாது.

அரசாங்கத்தின் கீழ் நிரந்தரமானதும் உபகாரச்சம்பளமுடையதுமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்தரொருவர் நியமனத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதிலாகக் கடமையாற்ற நியமிக்கப்படுவார்

**3. சம்பளம் படிகளும் :**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 11,040 ரூபாவில் ஆரம்பித்து வருடமொன்றிற்கு 480 ரூபா வீதம் 10 வருடங்களுக்கும், 600 ரூபா வீதம் 3 வருடங்களுக்கும் உயர்வடைந்து 17,640 ரூபாவை அடையும்.

**குறிப்பு:—**

தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகரின் தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து, திறைசேரியின் அங்கீகாரத்துடன் ஆரம்பச் சம்பளத்திட்டத்திலும் பார்க்க உயர்ந்த நிலையில் அவர் வைக்கப்படுவார். ஏற்கெனவே அரசாங்கத்தில் சேவைபுரியும் அபேட்சகரொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரின் சம்பளம் 13.6.59 ம் திகதியின் 492 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தால் திருத்தப்பெற்ற 26.2.57 ம் திகதியின் 361 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் விதிகளுக்கிணங்க நிர்ணயிக்கப்படும்.

**4. தேவையான தகைமைகள் :**—ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் பின்வரும் தகைமைகளுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்றுகளைக் காட்டவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1970.7.24 திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருக்கவேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை இத்திணைக்களத்தில் உள்ளவர்களுக்கு அமையாது).

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல், கணிதவியல் அல்லது புள்ளிவிபரவியல் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப் பட்டம் பெற்றவராயும் தரவு ஒழுங்குபடுத்தும் வேலையில் முகாமையாளராக அல்லது அப்பதவி போன்ற தன்மையில் குறைந்தது ஐந்து வருட அனுபவம் பெற்றவராயும் இருக்கவேண்டும்.

**குறிப்பு :—**

விண்ணப்பக்காரர் யாவரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாட்டத்திறன் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அப்பரீட்சையில் அல்லது பரீட்சைகளில் போதிய அளவு உயர்ந்த தரத்தை எய்தும் விண்ணப்பக்காரர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்குக் கவனிக்கப்படுவர்

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.—(**முக்கிய குறிப்பு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப்பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) கல்விச் சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருந்தால் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில்நுட்பத் தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழில்நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு:—**

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் பிரதிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதிவுகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் i ஆம் பாகம் (ii) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குமிபிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு அபேட்சகர்கள் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையவராகார்.

டி. ஆர். எல். பாலசூரிய.
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1, 1970.7.2.

400/—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

**AA.42/X2251/70.**

## கட்டடங்கள் திணைக்களம்

### மின்சாரப் பொறியியலாளர் பதவி

கட்டடங்கள் திணைக்களத்தில் மின்சாரப் பொறியியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பின்வரும் திகதிகட்கு முன்னர் செயலாளர், பொதுச்சேவை ஆணைக்குழு, கொழும்பு 1 என்ற முகவரிக்குக் கிடைக்க வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 1970.7.24.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 1970.7.31.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோள் அஞ்சலில் அனுப்பும்பொழுது முத்திரையிடாத 9″ × 4″ அளவுக்குக்குறையாத தமது முகவரியிடப்பட்ட உறையையும் உள்ளடக்கவேண்டும். பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர் அல்ல என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும். ;

(ii) விண்ணப்பப் படிவமோ அத்தகைய படிவத்தின் சார்பில் எழுதப்படும் கடிதமோ தபாலில் காணமற்போய்விட்டது என்றோ, தாமதமாக வந்தடைந்தது என்றோ செய்யப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசிநாள் வரை தங்கள் விண்ணப்பங்களை தாமதப்படுத்தும் பரீட்சார்த்திகள் அத்தகைய தாமதத்தால் ஏற்படும் பலாபலன்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்;

(iii) வெளிநாட்டு விண்ணப்பகாரர் விண்ணப்பப் படிவங்களை வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் விரும்பினால் தமது விண்ணப்பங்களை குறிப்பிட்ட காலவரையின் இடையில், வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கோ தமது இருப்பிடத்திற்கு அருகாமையிலுள்ள இலங்கைத் தூதராலயத்திற்கோ பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக சமர்ப்பிக்கலாம்;

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தினால் நியமனம் பெறும் வெளிநாட்டு இலங்கை உத்தியோகத்தர் தாம் சேவை செய்வதற்கு போதிய உடல் நலத்தை உடையவர்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்காக அங்கீகாரம் பெற்ற மருத்துவர் ஒருவரினால் தம்மை பரிசோதனை செய்து கொள்ளல் வேண்டும். அத்தகைய சோதனையின் செலவும் இலங்கைக்கு வரும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே கொடுக்கப்படல் வேண்டும்.

2. **நியமன விதிகளும் சேவை நிபந்தனைகளும்** : இப் பதவி நிரந்தர மானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதுமாகும். தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்தியால் விதவைகள், அநாதைப்பிள்ளைகள் நிதிக்குக்கட்டணங் கள் செலுத்தப்படல் வேண்டும்.

3. **வேதனம்** : இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அளவுத் திட்டம் வருமாறு : வருடத்திற்கு ரூபா 7,800—3 × 360—8,880/9,600—4 × 360 11 × 480—1,6320. ரூபா 9,600 பெறு முன்னும் ரூபா 13,920 பெறு முன்னும் வினைத்திறமைகாண் தடை உண்டு. வருடத்திற்கு 13,440 ரூபாவுக்கு மேல் வேதனம் பெறு முன் முழுத் தொழிற் தகைமையும் பெறுதல் அவசியம். முழுத் தொழிற் தகைமைகளையும் உடைய பரீட் சார்த்தி வருடத்திற்கு 9,960 ரூபா ஆரம்ப சம்பளத்தைப் பெறும் தகுதி உடையவராவர்.

4. **தகைமைகள்** : ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்வரும் தகைமை களை உடையரென திருப்திகரமான அத்தாட்சி வழங்கவேண்டும்.

(அ) சிறந்த குண இயல்பும் உடல் நலமும்.

(ஆ) 1970.7.24. ஆம் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்கட்கு இவ்வயதெல்லை பொருந்தாது).

(இ) (i) இலங்கைப் பல்கலைக்கழகத்தில் எந்திரவியலில் விஞ்ஞான மானி அல்லது இதே தரத்திலுள்ள பரீட்சையில் சித்தியடைந்த மை.

அல்லது

(ii) இலண்டன் மின்சாரப் பொறியியலாளர் நிறுவனத்தின் பரீட் சையில் I, II, III ஆவது பகுதிகளில் அல்லது இதே தரத்தி லுள்ள பரீட்சையில் சித்தியெய்தியமை.

அல்லது

(iii) இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தின் மின்பொறியியலாளர் பரீட்சையில் பகுதிகள் I, II, III இல் சித்தியடைந்தமை.

(ஈ) காற்றைச் சீராக்கும் அறிவு உள்ளவர்க்கு முன்னுரிமை அளிக்கப் படும்.

5. விண்ணப்பகாரர் பின்வரும் பத்திரங்களில் ஒன்றினையோ எல்லா வற்றையுமோ கேட்கப்படும்போது சமர்ப்பிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (**குறிப்பு** : ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் கோவைக்காக வழங்கப்படும் பிறப்புச் சார் பான சான்றிதழ் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) பட்டம் அல்லது மிகவும் உயர்ந்த கல்விச் சார்பான சான்றிதழ்.

(இ) குண இயல்பு சார்பான இரண்டு சான்றிதழ்கள். ஒன்று பாட சாலை அதிபர், கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடம் பெற்ற தாக இருத்தல் வேண்டும்.

(ஈ) சிங்களத்திலும்/தமிழிலும் தேறியுள்ள மிகவும் உயர்ந்த பரீட்சை சார்பான சான்றிதழ்.

**குறிப்பு** :

(1) விண்ணப்பப் படிவத்துடன், எந்த விதமான பத்திரமோ, பத்தி ரத்தின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(2) கேட்கப்படும்போது பத்திரங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப் பகாரரது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். எனி னும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தை அனுப்பிய திகதியைத் தெரிவுபடுத்தும் அறிவிப்பை பொதுச் சேவை ஆணைக்குச் செயலாளருக்கு, விண்ணப்பங்களுக்கான முடிவு திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக் கும் வண்ணம் நேரடியாக அனுப்பிவைக்கவேண்டும். விண்ணப்பத்து டன் வழங்கப்படும் அச்சிடப்பட்ட ("பீ" எனக் குறிக்கப்பட்ட) அஞ்சல் அட்டையை இக் காரணத்திற்காகப் பாவனை செய்யவும்.

7. விண்ணப்பங்களும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கடிதப் போக்குவரத்தும் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளரைத் தவிர்ந்த இந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த ஏனைய உத்தியோகத்தருக்கு விலாச மிடப்படக்கூடாது.

8. இந்த அரசாங்க வர்த்தமானியில் I ஆம் பிரிவின் II ஆம் பாகத் தின் ஆரம்பத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளின் நியமனங்களுடன் சார்புள்ள பொது நிபந்தனைகளை பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவங்களுடன் வழங்கப்பட்டதும் ("ஏ" எனக் குறிக்கப்பட்டதும்) அச்சிட்ட அஞ்சல் அட்டையில் கொடுக்கப்பட்டதுமான அறிவுறுத்துரைகளுக்கேற்ப பரீட்சார்த்திகள் அதனைப் பூரணப்படுத்தி, அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இந்த அலு வலகத்தில் கிடைக்கப் பெற்றதும், பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய நடவாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்படமாட்டாது. இத் தேவைக்கு அமைய நடந்தவர்கள் முடிவு திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் தமது விண்ணப்பம் கிடைத்தது என்ற அறிவிப்பைப் பெறுவிடின் பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு இவ்விடயத்தை உடனடியாக அறிவித்தல்வேண்டும். இத்தேவைக்கமைய நடவாத விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கான கோரிக்கை செய்யும் தகைமையை இழந்துவிடுவார்.

டி. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
பொதுச் சேவை ஆணைக்குழு.

அரசாங்கசேவை அதிகாரசபை அலுவலகம்,
தபாற்பெட்டி 500,
காலிமுகச் செயலகம் (கால்பேஸ் செக்கிரட்டேரியட்),
கொழும்பு 1, 1970 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ.

7–400/2—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

இல : A. B. 36/X. 2252/70.

## உற்பத்தி முகாமையாளர் பதவி, தகரத்திலடைக்கும் தொழிற்சாலை நாரகேன்பிட்டி—விற்பனைத் திணைக்களம்

விற்பனைத் திணைக்களத்திலுள்ள நாரகேன்பிட்டி தகரத்திலடைக்கும் தொழிற்சாலையில், உற்பத்தி முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப் படும் அச்சிடப்பட்ட படிவங்களில் எழுதப் பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை. அ. பெ. இல. 500. கொழும்பு–1. என்ற முகவரியில் கீழ்க்காணும் திகதிகளுக்கு அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.7.24.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.7.31.

**குறிப்பு** : (1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரி யிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை யிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத் தோடு அனுப்புதல் வேண்டும்; மேலும் அபேட் சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலிற் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எது வும் கவனிக்கப்பட்டமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பு வதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப் பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர் கள், சேவைக்கு தகுதியான உடல் நலமுடையவர்களா ளாயிருக்கின்றார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக் கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக் காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற் குரிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.—பதவி நிரந்தர மானதும் உபகாரச் சம்பளத்துக்குரிமையுடையதுமாகும். விதவைகள், அனாதைகள் சகாய நிதிக்குப் பணம் செலுத்துதல் தேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்** :—வருடமொன்றுக்கு ரூபா 6,725—360 × 12—ரூபா 11,040 (எல்லாம் உட்பட்ட சம்பளம்)

குறிப்பு : 1.10.69 முன்னுள்ள அடிப்படைச் சம்பளம் ரூபா 4080 —12 × 360—8400/- வருடமொன்றுக்கு.

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குச் சான்றுகள் காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராகவும் உடல் நலமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 24.7.1970 அபேட்சகர் 20 வயதிற்குக் குறையாதவராகவும் முப்பத்தைந்து வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில் ஏற்கனவே நியமனங்கள் பெற்றிருப்போருக்கு வயதின் மேலெல்லை செல்லுபடியாகாது.

(இ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது பொ. த. பரீட்சை. (சாதாரண தரம்) இரண்டு முறைகளுக்கு அதிகப்படாமல் தோற்றி, 6 பாடங்களிற் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தராதரம்.

(ஈ) பழவகை, மரக்கறிவகை பதார்த்தங்கள் உற்பத்தியில் 10 வருட அனுபவமும் அதில் நிருவாக அல்லது முகாமையாளர் தரத்தில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் வேலையில் 10 வருடத்திற்குக் குறையாமல் ஈடுபட்டிருந்ததாக நிரூபித்தல் வேண்டும்.

(i) பழரசம், சோஸ், சட்னி, ஜாம், முதலியவற்றிற்குத் தகுந்த பழங்கள், மரக்கறிகள் தெரிவு செய்தல்.

(ii) பழ வகை, மரக்கறிவகை மூலப் பொருட்கள் சேகரித்தலும் பாவித்தலும்.

(iii) பழவகை, மரக்கறிவகை உற்பத்தி நிரலுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெறுதல்.

(iv) பழவகை, மரக்கறிவகை, பதார்த்தங்கள் தகரத்திலடைப்பதற்குத் தொழிலாளரிடமிருந்து அதிகமான பிரயோசனத்தைப் பெறும் ஆற்றல்.

பழவகை, மரக்கறிவகை பதார்த்தங்கள் உற்பத்தி தகரத்திலடைக்கும் தொழிற்சாலை சம்பந்தமான ஏதாவது விசேஷ பயிற்சி பெற்றிருந்தால் அது ஓர் அதிகத் தகைமையாக எடுத்துக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு** :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவு நன் கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு.—இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும்/உயர் தொழிற்றகைமையும் அல்லது தொழில் நுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை. சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை என முகவரியிட்டனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " என குறியிடப்பட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆடு ஜூலை மீ 2 ந உ.

7—400/3—10.7.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,914

---

## காணிக் கமிசனர் திணைக்களம்

### சமூகவியலாளர் பதவி

காணி ஆணையாளர் திணைக்களத்திலுள்ள சமூகவியலாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இத்திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் நிரப்பப்பட்டு செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை. த. பெ. 500, கொழும்பு 1 என்ற முகவரிக்குப் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் :—24.7.70

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் :—31.7.70

குறிப்பு.—(1) அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை அஞ்சல் மூலமாக அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரை ஒட்டப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வர விருப்பவர் அரசாங்க சேவையிலிருப்பவரா அல்லது அல்லாதவரா என்பதை விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறும் குற்றச்சாட்டுகள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்கு கடைசித் திகதி வரைக்கும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிற நாடுகளிலுள்ள அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் அவ்விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகவும் கிட்டியுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாக இருக்கிறார்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு மருத்துவச் சோதனை செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாளர்களிடம் செல்லுமாறு கேட்கப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக் காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய கட்டணத்தையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே செலுத்துதல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரிமையற்றதுமாகும். தெரிவு செய்யப்படுவோர் அரசாங்க சேவ்வ சகாய நிதிக்குப் பணம் செலுத்துதல் வேண்டும். இப்பதவி நியமனம் 3 வருட காலப் பரிசீலனைக்கு உட்பட்டதாகும்.

3. **சம்பளமும் படிகளும்—இப்பதவிக்குரியதான சம்பளமும் படிகளும் பின்வருமாறு.**—வருடமொன்றுக்கு ரூபா 6,720—12 × 360 ம் 11 × 480—16,320 (ரூபா 8,880 க்கும் ரூபா 14,400 க்கும் முன்னதாக வினைத்திறமைகாண் தடையுண்டு).

**குறிப்பு.**—(1) நியமனம் பெறுபவர் அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் சமூகவியலில் (பி. ஏ.) பட்டத்திற்கு மேற்படிப்பினுள்ளவர் தெரிவு செய்யப்பட்டால் தெரிவு செய்யப்படுபவர் வருடமொன்றுக்கு 7,800 ரூபா சம்பளத்தில் நியமிக்கப்பட உரிமையுடையவராவார்.

(2) அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையில் சமூகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை அல்லது அதற்கு மேற்பட்ட பட்டத்தைப் பெறுதுவிடில் அவர் வருடம் 11,520 ரூபா சம்பள அடிப்படையிலிருந்து தகுதிகாண் நிலையிலிருந்து மேற் செல்லமாட்டார்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையை உடையோரென்பதற்குத் தக்க திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) சிறந்த நற்குணமுடையவரென்றும், நல்ல உடல் நலமுடையவரென்றும்,

(ஆ) 24.7.1970 ம் திகதிக்கு 22 வயதிற்குக் குறைவுபடாதவரென்றும் அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் சமூகவியல் கௌரவப் பட்டம் பெற்றவர் என்றும் 35 வயதிற்கு மேற்படாதவரென்றும் (அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு செல்லுபடியாகாது),

(இ) அனுமதிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் சமூகவியல் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர் அல்லது சமூகவியல் பாடத்தில் கௌரவப் பட்டம் பெற்றவரென்றும்.

5. அபேட்சகர் பின்வரும் சாதனங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ காட்டுமாறு கேட்கப்படும் போது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டா) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தையுடைய சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, அவற்றில் ஒன்று கல்வி அதிபரினால் அல்லது வித்தியாலயத்தின் அதிபரினால் வழங்கப்பட்ட அல்லது சர்வகலாசாலைப் போதனாசிரியரொருவரால் வழங்கப்பட்டதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் தான் பெற்றுள்ள தரத்தைக் காட்டும் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களின் படிவங்களையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் அணைத்து அனுப்பக் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் போது சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பம் கவனிக்கப்பட மாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் திணைக்களத் தலைவருக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அவ்வறிவித்தல் விண்ணப்பக் கடைசித் தேதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அது சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எவருடைய முகவரிக்கும் நேராக அனுப்புதல் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு உரித்தான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் முதலாம் பாகத்தில் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது). அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்களுடைய விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாதவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி விண்ணப்பக் கடைசித் தேதியிலிருந்து மூன்று கிழமைக்குள் அறிவிக்கப்படாவிடில் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டுக்கு அமைய ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவுமுடையவராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
1970 ம் ஆு ஜூலை மீ 2 ந் உ.

7–400/4—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

ஈஎ/2/17

## சுங்கத் திணைக்களம்

### மோட்டார்ப் படகு தண்டேல் பதவிகள்

சுங்கத் திணைக்களத்தில் மோட்டார்ப் படகு தண்டேல் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு 1970 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் கொழும்பு பிரதான சுங்க சேகரிப்பாளருக்கு (செயலகப் பிரிவு) அனுப்பப்படல் வேண்டும்.

2. **இப்பதவிக்கான சம்பள அளவுத்திட்டம்.**—ரூபா 1044—42—1296. (ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத் திட்டம் ரூபா 3,060—8 × 60—3,540).

3. **நியமன விதிகள்**—இப்பதவிகள் நிரந்தரமானவையும், உபகாரச் சம்பள உரித்துடையவையும் ஆகும். நியமனம் முதலில் 3 வருட காலத்திற்குத் தகுதிகாண் முறையில் அமையும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகள் பெற்றுள்ளவரெனத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையிலோ அல்லது அதற்குச் சமமான பரீட்சையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையிலோ சித்தியடைந்திருத்தல் வேண்டும் :

(ஆ) மோட்டார்ப் படகு தண்டேல் அனுமதிப் பத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

(இ) 1970 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆந் திகதியில் 25 வயதிற்குக் குறையாதவராயும், 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிறந்த நன்னடத்தையுடையவராயும், தேகாரோக்கியம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பப் பத்திரத்துடன் பின்வருவனவற்றின் பிரதிகள் (மூலப் பிரதிகளல்ல) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) மோட்டார்ப் படகு தண்டேல் அனுமதிப் பத்திரம் ;

(ஈ) பரீட்சார்த்தியின் அனுபவ தராதரத்தைப் பற்றிய ஏனைய பத்திரங்கள் ;

(உ) அண்மையில் பெற்ற மூன்று குணநலச் சான்றிதழ்ப் பத்திரங்கள்.

6. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் காரியாலய தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்கள் எனக்கு நேர்முகமாகவோ, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்காயினும் நேர்முகமாக அனுப்புதல் கூடாது.

3. இந்த வர்த்தமானியின் ஆரம்பத்தில் I ஆம் பகுதி II ஆந் தொகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

மா. ம. சங்கம், பிரதான சங்க சேகரிப்பாளர்.
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆடி மீ 1 ந் உ.

## சுங்கத் திணைக்களம்

### மோட்டார்ப் படகு தண்டேல் பதவிகளுக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் : ————.

2. விலாசம் : ————.

3. பிறந்த திகதியும் 1970 ஆம் ஆண்டு ஆடி மாதம் 21 ஆந் தேதியில் உள்ளபடி வயதும் : ————.

4. சாதியமும், அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————.

5. பிறந்த இடம் :

(அ) விண்ணப்பதாரர் : ————.

(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை : ————.

(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் : ————.

6. கல்வித் தகைமைகள் : ————.

7. அனுபவத் தராதரங்கள் : ————.

இவ் விண்ணப்பப் பத்திரத்தில் கொடுத்துள்ள விபரங்கள் யாவும சரியானவையும், உண்மையானவையும் என அத்தாட்சிப் படுத்துகிறேன். அத்துடன் இதில் கொடுத்துள்ள விபரங்களில் யாதேனும் பொய்யானவை அல்லது சரியற்றவை எனத் தெரிவு செய்யப்படுமுன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் இந்நியமனத்திற்குப் பின் காணப்படின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

7–383—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல.14,914

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக, இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிதித்துறை அதிபர்**

**தகைமைகள்.**—(அ) தகைமை பெற்ற பின்னர் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவத்துடன் கூடிய பட்டையக் கணக்காளராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியில், பத்து வருடங்களுக்குக் குறையாத அனுபவத்துடன் கூடிய இடைநிலைப் பட்டையக் கணக்காளராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) 15 வருட சேவைக்குக் குறையாத அரசாங்க/கூட்டுத்தாபன கணக்காளராய் இருத்தல் வேண்டும். இதில் பத்து வருடத்திற்கும் குறையாத சேவைகள் நிறைவேற்று உத்தியோகத்தர் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

**வயது.**—35 க்கும் 50 க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

**வேதனக் கிரமம்.**—சகலதும் உட்பட ரூபா 1,250—ரூபா 1,750 (10 × 50) ரூபா 1,350 பெறுமுன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

**நிதித்துறை முகாமையாளர்**

**தகைமைகள்.**—(அ) பட்டையக் கணக்காளராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) தகைமைக்குப் பின்னர் மூன்று வருடங்களுக்கும் குறையாத அனுபவத்துடன் கூடிய செலவுக் கணக்கு முறை வேலைகள் கணக்காளராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) தகைமைக்குப் பின்னர் ஐந்து வருடத்திற்கும் குறையாத அனுபவத்துடன் கூடிய இடைநிலைப் பட்டையக் கணக்காளராக இருத்தல் வேண்டும்.

அல்லது

(ஈ) நிறைவேற்று உத்தியோகத்தர் அடிப்படையில் பத்து வருடத்திற்குக் குறையாத அனுபவத்துடன் கூடிய இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்துறை தகுதித் தேர்வுப் பத்திரம் உடையவராய் இருத்தல் வேண்டும்.

அல்லது

(உ) அரசாங்க சேவை அல்லது/உம், கூட்டுத்தாபனச் சேவையில் 25 வருட சேவை இருத்தல் வேண்டும். இதில் குறைந்தது எட்டு வருட சேவை நிறைவேற்றும் உத்தியோகத்தர் அடிப்படையில் அமைய வேண்டும்.

**வயது.**—30 க்கும் 45 க்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

**வேதனக் கிரமம்.**—ரூபா 720—ரூபா 1,200 (7 × 40—4 × 50) ரூபா 920 பெறுமுன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.

இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதிக்குப் பிந்தாமல், பதிவு அஞ்சல் மூலம் கொழும்பு 7, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மா அதிகாரிக்குக் கிடைக்கக் கூடியவாறு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். உறையின் இடதுகோடித் தலைப்பில், " நிதித்துறை அதிபர்/நிதித்துறை முகாமையாளர் " என்று எது பொருத்தமோ, அதனைக் குறிப்பிடல் வேண்டும்.

சுசில் குமார் முனசிங்ஹ,
மா அதிகாரி.

கொழும்பு 7,
1970 ம் ஆண்டு ஜூன் மீ .

### மாதிரி விண்ணப்பப் படிவம்

.................... பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் :————.

(1) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
(திரு/திருமதி/செல்வி : எதுவென்று குறிப்பிடவும்)

(2) முகவரி :————.

2. பிறந்த திகதியும், இடமும் :————.

1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதியில் வயது :—
வருடங்கள் :——. மாதங்கள் :——. தினங்கள் :——.
(பிறப்புச் சான்றிதழ் இணைக்கப்படல் வேண்டும்).

3. தேசிய இனம் :————.

4. கல்வியும், பயிற்சியும் :————.

| பயின்ற பாடசாலைகள் அல்லது நிலையங்கள் | எத்திகதி முதல் எத் திகதி வரை | சித்தியடைந்த பரீட்சைகள் | வகித்த பொறுப்புள்ள பதவிகளும் செயல்களும் |
|---|---|---|---|
| ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ |
| ........ | ........ | ........ | ........ |

5. சித்தியடைந்த உயர்தர பரீட்சை :————.

(1) சிங்களம் :————.

(2) தமிழ் :————.

(3) ஆங்கிலம் :————.
(சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்).

6. அனுபவம்.—உமது முன்னைய அனுபவம், வேலைப் பதிவுகள் போன்றவற்றை விபரமாக படிமக்கிரமமான முறையில் தரவும்.

| நிறுவனத்தின் பெயர் | வகித்த பதவி | எத்திகதி முதல் திகதி வரை | விலகிய காரணம் |
|---|---|---|---|
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |
| ............ | ............ | ............ | ............ |

7. உறவினர் அல்லாத தனிப்பட்ட வாழ்க்கையில் நன்கு பரிச்சியமான மூன்று சான்றுநர் பெயர்களும், அந்தஸ்தும், முகவரியும் :—

1. ..........................................

2. ..........................................

3. ..........................................

8. நற்சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ள மூவரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :—

1. ..........................................

2. ..........................................

3. ..........................................

9. வேறு விபரங்கள் : : ..........................................

..........................................

..........................................

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள், உண்மையானவையென்றும், சரியானவை என்றும் இத்தால் நான் சான்றுரைக்கிறேன். இதில் தரப்பட்டுள்ள எந்த விபரமும் தவறானதாக அல்லது பொய்யானதாக இருக்கும் பட்சத்தில் தேர்வின்போது அல்லது அதற்கு முன்னர் நான் தகைமை இழந்தவனாவேன் என்பதனையும், நியமனத்தின் பின்னர் இத்தவறுகள் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நஷ்டஈடு எதுவுமின்றிப் பதவி நீக்கம் செய்யப்பட்டவனுமாவேன் என்பதனை நான் நன்கறிந்துள்ளேன்

————————,

திகதி :————. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

7—387—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

## கல்வி அமைச்சு

### பேராதனை, அரசினர் ஆசிரியர் கலாசாலையில் மொழி ஆய்கூடப் பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள பேராதனை அரசினர் ஆசிரியர் கலாசாலையிலுள்ள மொழி ஆய்கூடப் பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு (ஆசிரியர் கலாசாலைகள் கிளை) 1970 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

குறிப்பு.—

(i) அச்சிடப்பட்ட படிவங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அறிவித்தலில் கொடுபட்டுள்ள படிவத்தையே அபேட்சகர்கள் பிரதிசெய்து கொள்ள வேண்டும்.

(ii) விண்ணப்பம் எதுவேனும் அஞ்சலில் காணமற்போனது அல்லது தாமதிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களைக் கடைசிநாள் வரை தாமதிக்கும் விண்ணப்பதாரிகள் தாமாகவே இடரைத் தேடுபவராவர்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். தெரிவுசெய்யப்படுவதற்குமுன் உபகாரச் சம்பளக் குறிப்புகளின் கீழ் ஆசிரியராக உபகாரச் சம்பள உரித்துடைய பதவியை வகித்த ஒரு நியமதாரியைப் பொறுத்தவரையில், அவர் இப்பதவியை வகிக்கும் வரை அது உபகாரச் சம்பள உரித்துடையதாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

(ii) தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் முதற்கண் பேராதனை ஆசிரியர் கலாசாலைக்கு நியமிக்கப்படுவார் ; ஆனால் வேறு எவ்வாசிரியர் கலாசாலைக்கேனும் அவர் மாற்றப்படக்கூடும்.

3. **சம்பளமும் சகாயப்படியும்**

இப்பதவிக்குரிய ஒன்றுதிரட்டிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

ரூ. 6,024—4 × 144—8 × 180—2 × 240—8,520 வருடாந்தம்.

(குறிப்பு.—1.10.69 க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் :—
ரூ. 3,420—4 × 120—8 × 180—2 × 240—5,820)

4. **தேவைப்படும் தகைமைகள்.**

ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்திகரமான சான்று காட்டவேண்டும்.

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 24.7.70 அன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அமையாது).

(இ) இடைமாணித் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது க. பொ. த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி எய்தியவர்களும் 5 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றவர்களுமான பயிற்றப்பட்ட பட்டதாரிகளாக இருக்க வேண்டும். பட்டப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி எய்தியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையும் இவ் வர்த்தமானியில் I ஆம் பகுதி II ஆம் பிரிவின் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகிறது.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2.
1.7.1970

### (மாதிரிப் படிவம்)

### பேராதனை, அரசினர் ஆசிரியர் கலாசாலையில் மொழி ஆய்கூடப் பயிற்சி ஆசிரியர்/ஆசிரியை பதவிக்கான விண்ணப்பம்

1. (i) முழுப்பெயர் : ————.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி./செல்வி. :————.

2. தபால் விலாசம் :— (i) சொந்த : ————.
   (ii) அலுவலக : ————.

3. 24.7.70 அன்றுள்ளபடி சரியான வயது :————
   வரு : ———— மா : ———— நா : ————.
   பிறந்த திகதி : ————.

4. சாதியமும் அது எவ்வாறு பெறப்பட்டதென்பதும் : ————.

5. பிறந்த இடம் : ————.
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.

6. (i) திகதிகளுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகள் : ————.
   (பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வித் தகைமைப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்).
   (ii) பட்டப் பரீட்சைக்கான பாடங்கள் : ————.

7. தொழிற் தராதரங்கள் : ————.
   (பெற்றுக்கொள்ளப்பட்ட தொழிற் தராதரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

8. படித்த பாடசாலைகளின்/கல்லூரிகளின் பெயர்கள் : ————.
(சேர்ந்த, விலகிய திகதிகள் கொடுக்கப்பட வேண்டும்)

9 படிப்பித்தல் அனுபவங்கள் : ————.
(பின்வரும் முறையில் விபரங்களைக் கொடுக்கவும்)

| பாடசாலையின்/கல்லூரியின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | வகித்த பதவி | சேவைக் காலம் வரு. மா. நா. | விலகிய தற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

மொத்தம் :

10. சிங்களத்தில்/தமிழில் பெற்றுள்ள அறிவு : ————.

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (இனத்தவர்களல்லாதோர்)————.
அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப்படிகள் அல்ல—இணைத்தனுப்பப்படவேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை.

12. வேறு யாதேனும் தகைமைகள் : ————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

————:
அதிபரின் கையொப்பம்.

திகதி : ————.

7-344—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

# இலங்கைப் போக்குவரத்துச் சபை

## வசுச் சாரதிகளுக்கான காலிஸ்தானங்கள்

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் வசுச் சாரதிகளாக வேலை செய்வதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆகக் குறைந்த தகைமைகளையுடையவர்களாகவிருக்க வேண்டும் :—

(அ) கல்வி.—5 ஆம் தரம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)

குறிப்பு.—பாடசாலைச் சான்றிதழ், கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரத்தில் இருக்க வேண்டும்.

(ஆ) வயது.—20.7.1970 ஆம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) உயரம்.—5 அடி. 3 அங்குலம்.

(ஈ) நிறை.—100 இருத்தல்.

(உ) உத்தரவுச் சீட்டு.—மோட்டார் கோச்சுக்களை (வசு) செலுத்துவதற்கான திறமைச் சான்றிதழ், இது 20.7.1970 க்கு முன்பு பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) அனுபவம்.—20.7.1967 க்கு முன்பு, பாரமான வாகனங்களைச் (லொறிகளையும்/அல்லது மோட்டார் கோச்சுக்களையும்) செலுத்துவதில் ஒரு ஆண்டு அனுபவம்.

3. பாரதூரமான மோட்டார் குற்றங்களுக்காக அல்லது கிறிமினல் குற்றங்களுக்காக விண்ணப்பதாரர்கள் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருக்கக்கூடாது.

4. நேர்முகப் பரீட்சைக்குப் பின் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், சபையின் வைத்திய உத்தியோகத்தரால் அல்லது சபை நியமித்த வேறொரு வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதனை செய்யப்படுவதற்காக சமுகமளிக்குமாறு வேண்டப்படுவர். வசுச் சாரதிகளாகச் சேவையாற்ற தேகத் தகுதியுடையவரென்று உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

5. சோராட்களுக்கு, இரண்டு வாரங்களுக்கு அல்லது கூடிய காலத்துக்கு நடைபெறும் பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு ரூபா 3 படி கொடுக்கப்படும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின் அவர்கள் ஒருவருட தகுதிகாண் நிலையில் ரூபா 240 மாதாந்தச் சம்பளத்தில் நியமிக்கப்படுவார்கள். அவர்களின் சம்பள அளவுத் திட்டம் ரூபா 240—ரூபா 10 × 13—370 ஆகும்.

6. விண்ணப்பங்கள் இதன்கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப, அபேட்சகரின் சொந்தக் கையெழுத்தில் 'பூல்ஸ்காப்' அரைத் தாளில் எழுதப்பட்டு, விண்ணப்பங்கள் உள்ளடங்கிய உறைகள், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணி முகாமையாளருக்கு விலாசமிடப்படவேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் "பீ. பி. டி. கிளை" எனக் குறிக்கப்பட வேண்டும். இவ் அலுவலகத்தினால் விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

7. பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், குணச் சான்றிதழ், அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளும் விண்ணப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும். மூலச் சான்றிதழ்கள் அனுப்பப்படக்கூடாது.

8. விண்ணப்பங்கள் 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் தேதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

9. முடிவுத் தேதிக்குப் பின் கிடைக்கும் அல்லது மேற்கூறிய தேவைகட்கு இணங்காத விண்ணப்பங்கள் கழிக்கப்படும்.

10. ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட அல்லது வேலைநீக்கம் செய்யப்பட்ட சபையின் ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாராகேன்பிட்டி,
கொழும்பு 5.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் :————.

2. விலாசம் :————.

3. (அ) பிறந்த தேதி—
(ஆ) 20.7.70 ஆம் தேதியன்று வயது :———— வருடங்கள் ———— மாதங்கள்.

4. கல்வித் தகைமைகள் :————.
(சித்தியடைந்த ஆகக் கூடிய தரத்தையும் மொழியையும் கூறுக.—சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்).

5. (அ) திறமைச் சான்றிதழின் இலக்கமும் தேதியும் :————.
(ஆ) லொறிகளைச் செலுத்துவதற்கு உத்தரவுச் சீட்டு நீடிக்கப்பட்ட தேதி :————.
(இ) மோட்டார் கோச்சுக்களைச் செலுத்துவதற்கு உத்தரவுச் சீட்டு நீடிக்கப்பட்ட தேதி :————.

6. உயரம் :— ————அடி. ———— அங்குலம்

7. நிறை :———— இருத்தல்.

8. அனுபவத்தின் விவரங்கள் :————.

9. விசேட தகைமைகள், ஏதேனுமிருப்பின் :————.

10. தற்போதைய வேலை, ஏதேனுமிருப்பின் :————.

11. விண்ணப்பதாரர் வதியும் அரசிறை மாவட்டமும் தொகுதியும் :————.

என்னால் மேற்தரப்பட்டுள்ள விவரங்கள் சரியென்றும் குற்றவியல் தவறொன்றுக்கும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக நான் காணப்பட்டேன்/காணப்படவில்லை என்றும் அல்லது நன்னடத்தைப் பிணையில் கட்டுப்பட்டேன்/கட்டுப்படவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். நான் குற்றவாளியாகக் காணப்பட்ட/நன்னடத்தைப் பிணையில் கட்டுப்பட்ட குற்றங்களின் விவரங்களும் வழக்குகளின் இலக்கங்களும் பின்வருமாறு :————.
என்னால் மேற்தரப்பட்டுள்ள விவரங்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் வேலையிலிருந்து எக் கட்டத்திலும் நீக்கப்படக்கூடுமென நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் ஒப்பம்.

திகதி :————.

7-426—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

தொடர்பு எண். எஸ். ஜீ./79

### இலங்கைப் பரீசைப் பகுதி

**இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை**
**இந்து சமயம்**

1969, அக்டோபர் 28 ஆந் திகதிய, 2 ஆம் இலக்கத் திருத்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்த, மேற்படி பாடத்திற்குரிய புதிய பாடத்திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளதென இத்தால் சகல பாடசாலைத் தலைவர்களும் பரீட்சார்த்திகளும் அறிவிக்கப்படுகின்றனர். மேலும் அறிவித்தல் கொடுக்கப்படும் வரை, இதுவரை வழக்கிலிருந்த பாடத்திட்டமே தொடர்ந்த நடைமுறையிலிருக்கும்.

கே. ரீ. டபிள்யூ. சமரசூரிய,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு ஜூன் மீ 24 ந உ.

7–300—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

## மொறட்டுவை, கட்டுபெத்தையிலுள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்தல்

### தொழில் நுட்பவியல் டிப்ளோமாப் பயிற்சி நெறி

1969 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பத்திரப் பரீட்சையில்,

பௌதிகம்,
இரசாயனம்,
தூய கணிதம்,
பிரயோக கணிதம்

ஆகிய நாலு பாடங்களிலும் சித்தி எய்தியவர்களிடமிருந்தோ,

அல்லது

மேற்படி பரீட்சையில் மேற்கூறிய பாடங்களில் ஏதேனும் மூன்றில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுச் சித்திஎய்தியவர்களிடமிருந்தோ,

தொழில் நுட்பவியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு 1970/71 ம் ஆண்டில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. இப் பயிற்சி நெறிக்கு இரு பாலரும், 1970 ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியன்று வயது பதினெழு அல்லது அதற்கு மேற்பட்டிருப்பின் அனுமதிக்கப்படுவர்.

3. விண்ணப்பங்கள் கல்லூரியால் விதித்த படியான பத்திரங்களில் அனுப்பப்பட வேண்டும். இப்பத்திரங்களை மேற்படி கல்லூரிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினமாகிய 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ம் திகதியன்றோ அதற்கு முன்னரோ அவை மேற்படி பதிவாளரிடம் வந்து சேருதல் வேண்டும்.

4. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிதி உதவியுடன் இயங்குகிறது. சிவில், பொறிமுறை, மின்சார எந்திரவியல்களும், இலெக்ரோனிக்ஸ், தொலைச் செய்திப் போக்குவரவு முறைகளிலும் தொழில் நுட்பவியலாளருக்கான பயிற்சி நெறிகள் நடைபெறும். இப் பயிற்சி நெறிகள் ஐந்து வருட வகுப்பாக அமைவதுடன், பொறித் தொகுதிப் பயிற்சியில் அல்லது உயரிய துறையில், தேசிய கைத்தொழில்களில் அல்லது அரசாங்க ஸ்தாபனங்களில் 12 மாதங்களுக்குக் குறையாமல் வேலைப் பயிற்சியும் கொண்டதாக அமையும். இங்ஙனம் பெற்றுக் கொள்ளப்படும் செய்கை முறைப் பயிற்சிக்கு இவர்கள் தொழில் கோரும் நேரத்தில், மதிப்புக்கொடுபடும். முழுப் பயிற்சி நெறியையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்வோருக்குத் தொழில் நுட்பவியல் டிப்ளோமாப் பத்திரம் வழங்கப்படும் ; இப்பத்திரம் பட்டத்துக்குக் சமனுகை கருதப்படும்.

5. 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகும் பயிற்சி நெறியைப் பொறுத்த வரையில், சிவில், பொறிமுறை எந்திரவியல்களுக்கும் மின்சார இலெக்ரோனிக்ஸ், தொலைச் செய்திப் போக்குவரவுப் பிரிவுக்கும் முறையே 30, 30, 45 மாணவர்களுக்கு இடமுண்டு.

எல். எச். சமணதாச,
அதிபர்.

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி,
கட்டுபெத்தை,
மொறட்டுவை.
1970 ம் ஆண்டு யூலை மீ 10 ம் உ.

7–349—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

## அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் மூன்று வருட தொழில் நுட்பவியலாளர் பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்த்தல்

1970/71 ஆம் பருவ காலத்தில் தொழில்நுட்பவியலாளருக்குரிய மூன்றுண்டு முழுநேரப் பகல் பயிற்சி நெறிக்கு (2 ஆண்டுகள் கல்லூரியிலும் ஓராண்டு கைத்தொழிலும்) சேர்வதற்குத் தகவுடைய பரீட்சார்த்திகளிடமிருந்து ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தினரால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. **தகவுத்திறன்.**—

(அ) **வயது.**—பரீட்சார்த்திகள் 1970 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ந் திகதியன்று 16 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 20 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

(ஆ) **கல்வித் தேவைகள்.**—தூயகணிதம், பௌதிகம், ஒரு மொழி ஆகியவை உட்பட க.பொ.த. பத்திரப் பரீட்சையில், ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இவற்றுள் குறைந்த பட்சம் விஞ்ஞான பாடங்கள் இரண்டு உட்பட 3 பாடங்களில் திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

3. ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் ஆண்கள் மட்டுமே சேர்க்கப்படுவதுடன் அவர்கள் நிலையத்திலேயே வதிய வேண்டும்.

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் 1 க்கு அமைய விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரி படித்த/படிக்கும் மகா வித்தியாலய அல்லது தனிப்பட்ட உயர்தர பாடசாலை அதிபருக்கு, கீழ்க்காணும் 6 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்தற்கான கடைசித் திகதிக்குமுன் அதிபர்கள் அனுப்பி வைக்கும் பொருட்டுக் கூடிய விரைவில் அனுப்பப்பட வேண்டும். (அச்சிட்ட விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது).

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தாம் கடைசியாகப் படித்த பாடசாலை அதிபர்கள் மூலம் அனுப்ப வேண்டும்.

5. மகா வித்தியாலயங்களின் அல்லது தனிப்பட்ட உயர்தர பாடசாலைகளின் அதிபர்கள், தமக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களைச் சரிபார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள 2 ஆம் படிவத்துக்கமைய ஓர் அட்டவணையைத் தயாரித்து, தொழில்நுட்பப் பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கான மாணவரின் தகுதி பற்றிச் சிபார்சு செய்ய வேண்டும். சிபார்சு செய்யும்பொழுது விண்ணப்பதாரியின் கல்வித் திறமையையும் அவர் பங்கு பற்றிய வெளி முயற்சிகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். (அச்சிட்ட படிவங்கள் வழங்கப்படமாட்டாது).

6. அதிபர்கள் விண்ணப்பங்களையும், தமது சிபார்சையும் கொண்ட அட்டவணையையும் 1970 ம் ஆண்டு யூலை மாதம் 31 ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக, அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையப் பதிவாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும். இத்திகதிக்குப்பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. மாணவர்கள் தெரிவு எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவை மூலம் நடைபெறும்.

8. எந்திரவியல் பட்டப் பயிற்சி நெறிக்குச் சமனான 5 வருட தொழில்நுட்பவியல், தகுதித் தேர்வுப் பயிற்சி நெறியிலுள்ள முதலாவது 50 இடங்களும், இரு வருடத் தொழில்நுட்பவியல் பயிற்சி நெறியின் பின் இக்கல்லூரியிலும், இலங்கைத் தொழில்நுட்பவியற் கல்லூரியிலும் உள்ள மிகச் சிறந்த 50 மாணவர்களுக்கு, க.பொ.த. (உயர்தர) பத்திரப் பரீட்சைப் பெறுபேறுகள் கணிக்கப்படாது, தொழில்நுட்பவியலாளர் இறுதிப் பரீட்சையில் விதிக்கப்படும் தரத்தை அடைவதற்கமைய, வழங்கப்படும். (குறித்த தரம் பின்னர் விதிக்கப்படும்).

ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையம், அம்பாறை,
1970 ம் ஆு ஜூன் மீ 20 ந் வ.

எச். விஜயரத்தின,
அதிபர்.

## படிவம் 1

அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப வியலாளர்

### அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்தில் தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறியில் சேர்தற்கான விண்ணப்பம்

குறிப்பு.—மேற்குறித்த அறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள வயதுத் தகைமையையும் கல்வித் தேவைகளையும் கண்டிப்பாகப் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

1. முழுப்பெயர் :————.
   (தெளிவாக எழுதவும்)
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த திகதி :————.
   (பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. 1.10.1970 அன்று உள்ளபடி வயது :————. மாதம் :————. நாள் :————.
5. சாதியம் :————.
6. தகப்பனின் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :————.
7. படித்த மகா வித்தியாலயத்தின் அல்லது தனிப்பட்ட உயர்தர பாடசாலையின் பெயரும் முகவரியும் :————.
8. (அ) மேற்குறித்த அறிவித்தலின் 2 (ஆ) ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பெற்ற க.பொ.த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சை வருடமும், மாதமும் :————.
   (ஆ) சித்தி எய்திய பாடங்கள், பெறுபேறுடன் (சாதாரண சித்தி, திறமைச் சித்தி, விசேட சித்தி முதலியன).—

| பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| 1. தூய கணிதம் | ............................ |
| 2. பௌதிகம் | ............................ |
| 3. மொழி | ............................ |
| 4. ............................ | ............................ |
| 5. ............................ | ............................ |
| 6. ............................ | ............................ |

9. வெளி முயற்சிகள் :————.
10. 1970/71 ஆம் பருவ காலத்தில் தொழில்நுட்பவியலாளருக்குரிய பயிற்சி நெறிக்குக் கட்டுபெத்தை, இலங்கை தொழில்நுட்பவியற் கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பித்தீராவெனக் கூறவும் :————,

திகதி :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

## படிவம் 2

விண்ணப்பங்களின் அட்டவணை :————.

பாடசாலையின் பெயர் :————.

| எண் | விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | பிறந்த திகதி | சித்தி எய்திய பாடங்கள்,தரங்கள் | | | க.பொ.த. (சாதாரண தர) ப. பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | கல்வித் திறமை | பாடசாலைத் தலைவரின் சிபாரிசும், குறிப்புரையும் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொழிகள் | விஞ்ஞானம் | ஏனையவை | | | |
| | | | | | | | | |

அதிபரின் கையொப்பம் :————.

திகதி :————.

7 345— 10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

எனது இலக்கம் : 2/18/30/69

## காணி ஆணையாளர் திணைக்களம்

பின்வரும் வேலையைச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களைத் த. பெ. எண் 500, கொழும்பு என்னும் முகவரியிலுள்ள காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த கேள்விப்பத்திர சபைத் தலைவர் அவர்கள் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ந் திகதி பி. ப. 2.30 மணி வரை ஏற்றுக் கொள்வார்.

| வேலையின் விபரம் | | தேவைப்படும் பதிவுத்தொகை ரூபாய் |
|---|---|---|
| திப்பட்டுக்கொட–ஹப்பரகல நீர் வினியோகத் திட்டம் | .. | 15,000 |

2. மேற்குறிப்பிட்ட தொகைக்கோ அல்லது அதிற் கூடிய தொகைக்கோ அரசினர் கட்டுவேலைப் பகுதி, நீர்ப்பாசனம் அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கட்கும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் இக் கேள்விக்கான வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ந் திகதி நண்பகல் 12 மணி வரை வழங்கப்படும்.

3. வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் நுவரெலியாக் கச்சேரியில் ரூபாய் 50 கேள்விக் கட்டணமாகக் கட்டிய பற்றுச்சீட்டு கேள்விக்காரர்களால் நுவரெலியா அரசாங்க அதிபருக்குக் காண்பிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன இக்கேள்விக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. காசோலை, காசுக்கட்டளை, தபாற் கட்டளை முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள உறை முத்திரையிடப்பெற்று, உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அவற்றை நேரடியாகக் கொழும்பிலுள்ள செயலகக் கட்டிடத்தின் 357 ம் இலக்க அறையினுள் வைத்திருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியிலும் போடலாம்.

5. கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ந் திகதி பி. ப. 2.30 மணிக்குக் கொழும்பிலுள்ள செயலகக் கட்டிடத்தின் 357 ம் இலக்க அறையில் வைத்துத் திறக்கப்படும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் இலங்கையரை வேலைக்கமர்த்துவதற்கு இணங்க வேண்டும். மேலும், அவர்கள் வேலை நடைபெறும் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாயுமிருக்க வேண்டும்.

7. மேற்கூறிய நிபந்தனைகட்கமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தகாரர் நடக்கத் தவறினால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும். ஆனால் விசேடமான சூழ்நிலைகளில் ஒப்பந்தம் எவ்வுத்தியோகத்தருடன் செய்யப்பட்டதோ அவ்வுத்தியோகத்தர் காணி, விவசாய அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்துவதற்கு எழுத்துமூலம் அனுமதியளிக்கலாம்.

மேற்கூறிய அனுமதியை எழுத்துமூலம் பெறுமல் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்துதல் தவிர்க்கப்பட்டுள்ளது. அது ஒப்பந்தத்தை மீறியதுமாகும்.

8. இவ்வொப்பந்தத்துக்கு "இலங்கையர்" என்பது வம்சாவழி அல்லது பதிவுப் பிரசைகளைக் குறிக்கும்.

9. ஒப்பந்தகாரர் தற்போது அமுலிலிருக்கும் அல்லது எதிர்காலத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்படும் தொழிலாளருக்கான சம்பளச் சட்டங்களுக்கமையத் தன்னால் ஒவ்வொரு துறையிலும் வேலைக்கமர்த்தப்படும் தொழிலாளருக்கு நியாயமான சம்பளம் வழங்க வேண்டும்.

10. ஒப்பந்தகாரர் காணி ஆணையாளர் திணைக்களத்தின் அனுமதி பெற்ற எவ்வுத்தியோகத்தரையும் இவ்வேலையோடு தொடர்புடைய புத்தகங்கள், கணக்கேடுகள், வேலையாட்கள் வார அட்டை முதலிய வற்றைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

11. வேறேதும் விபரங்கள் தேவைப்படின் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

12. தவறிழைக்கும் ஒப்பந்தகாரர் பட்டியலிற் காணப்படும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

டபிள்யூ. எச். நவரத்ன,
நுவரெலியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

நுவரெலியா கச்சேரி,
1970 ம் ௵ ஜுன் ௴ 30 ந் உ.

7-407—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கேள்விப் பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ளது

1970 ம் ஆண்டு மே மாதம் 30 ந் திகதி முடிவடைந்த 1400 நீள்தொன் பிளீசட் சல்பைற் பல்பிற்கான கேள்விப் பத்திரம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ௵ ஜுன் ௴ 26 ந் உ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

7-386/1—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கிட்டத்தட்ட 5,000 நீள் தொன் பத்திரிகைக் கடதாசியைச் சுருள்களாக வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

கிட்டத்தட்ட 5,000 நீள் தொன் எம். எவ். நியமமான பத்திரிகைக் கடதாசியைச் சுருள்களாக 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து மாதாந்தத் தவணையில் கப்பற் சரக்குகளாக வழங்குவதற்கு பொறுப்பு முதல்வர்கள் அல்லது [illegible]துவம் பெற்ற பிரதிநிதிகள் ஆகியவர்களிடமிருந்து விலைக் குறிப்பீடுகள் கொள்விலையும் கப்பற் கேழ்வும் கொழும்பில் கோரப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துள்ள சகல வெளிநாட்டு வழங்குனர்களுக்கும் விபரக் கூற்றுக்கள் மற்றும் தொகைகள் ஆகியவற்றைக் கொடுக்கும் கேள்விப் பத்திரப் படிவங்கள் அஞ்சலில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இக்கேள்விப் பத்திரத்தில் பங்குபற்ற விரும்பும் ஏனையவர்கள் பொறுப்பு முதல்வர்கள்/உற்பத்தியாளர்கள் ஆகியவையின் பெயர் மற்றும் விலாசம் ஆகியவற்றைக் கொடுத்து கேள்விப் பத்திரப் படிவங்களுக்கு விண்ணப்பம் செய்யுமாறு வேண்டப்படுகிறார்கள்.

1970 ம் ஆண்டு யூலை மாதம் 22 ந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைக் குறிப்பீடுகள் முடிவடையும்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1970 ம் ௵ ஜுன் ௴ 22 ந் உ.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

7-386/2—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**கண்டி உபபிரிவு " A "**

கண்டி உபபிரிவில் " கூடுதலான கட்டிடங்களும் காணி உபயோக ஆய்வு கூட விருத்திகளும் கட்டுவது " சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் குண்டசாலை மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 30.7.1970 முற்பகல் 10.00 மணிவரை ஏற்கப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 27,000/– அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்காரர்களும் கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்குரிய வெற்றுப்பத்திரங்களை கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய நீர்ப்பாசன உபபிரிவு காரியாலயங்களில் 28.7.70 பிற்பகல் 4.30 மணிவரை பெற்று மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயங்களில் ஒன்றில் அல்லது கச்சேரியில் கேள்விக் கட்டணமாகிய ரூபா 50/– ஐக் கட்டிப் பற்றுச்சீட்டுடன் கேள்விகளை இரு பிரதியில் சமர்ப்பிக்கவேண்டும்.

கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகத்தைப் பரிசோதனைக்குச் சமர்ப்பித்து கேள்விக்குரிய வெற்றுப்பத்திரத்தைக் கோர வேண்டும்.

4. இக்கேள்விக்குரிய விபரங்களை அறிய விரும்புவோர் கண்டி உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் கந்தோரில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரீ. ஜே. டீ. பின்ரோ,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கண்டி உபபிரிவு.

நீர்ப்பாசனக் கந்தோர்,
குண்டசாலை,
24.6.1970.

7–308—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

## தபாற் தந்திப் பகுதிக்கு ஈயப் பொறிகள் வழங்கல்

ஈயப்பொறிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 1970, ஜூலை 27 ம் திகதி மு. ப. 10 மணிவரை கொழும்பு 1, தபால் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகத்திலுள்ள திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 1970, ஜூலை 27 ம் திகதி மு. ப. 10.05 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் போது கேள்விப்பத்திர விண்ணப்பதாரர் பிரசன்னமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும்.

4. கொழும்பு 1, பி. த. க. விசாரணை செய்யும் கருமபீடத்தில் (4 ம் கருமபீடம்) பொறுப்புப்பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரர்களுக்கே கேள்விப் பத்திர சாதனங்கள் 1970, ஜூலை 10 ந் திகதி தொடக்கம் 1970, ஜூலை 23 ந் திகதி பி. ப. 4.30 மணிவரை வழங்கப்படும்.

5. மேலதிக விபரங்கள், கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேணன் எம். அபேசேகர,
அஞ்சல் அதிபர் நாயகமும்
தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபால் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

7–314—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

## அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத் திணைக்களம்

**பாவனைக்குதவாத களஞ்சியப் பொருட்களின் விற்பனை**

பாவனைக்குதவாத களஞ்சியப் பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1, கோட்டை, அ.த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தந்தித்தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்திலுள்ள கேள்விச்சபைத் தலைவரால் 30.7.1970 ஆம் திகதி மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கொழும்பு 1, கோட்டை, அ.த. தலைமை அலுவலகக் கட்டிடம், பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களில் இணைப்படியில் கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் வேண்டும். பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரிடமிருந்து முழுவிபரங்களையும் தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அவரது அலுவலகத்தில் கேள்விப்பத்திர சாதனங்களையும் பரிசீலனை செய்யலாம்.

3. கொழும்பு 1, மத்திய தந்தி அலுவலகம், தந்திக்காசாளரிடம் அல்லது எந்த அஞ்சல் அலுவலக அஞ்சல் அதிபரிடம் கேள்விப்பத்திர பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டினைப் பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் கேள்விப்பத்திர விண்ணப்பதாரருக்கே கேள்விப்பத்திரச் சாதனங்கள் 26.7.1970 ஆம் திகதி ந. ப. 12.00 மணிவரை வழங்கப்படும்.

வி. அழகரத்தினம்,
பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப் பொறியியலாளர்.

பிரதான தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துப்
பொறியியலாளரின் அலுவலகம்,
அஞ்சல் தந்தித் தொலைசெய்திப் போக்குவரத்துத்
தலைமை அலுவலகக் கட்டிடம்,
லோட்டஸ் வீதி, கோட்டை,
அ. பெ. இல. 503, கொழும்பு 1.

7–399—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

---

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

நீர்கொழும்பு, குறுனு, தியஹொந்த எலவத்தை வீடமைப்புத் திட்டத்தில் 30 " பாதையை அமைப்பதற்காக 1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ம் திகதியில் காலை 10 மணிவரை கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. 1970 ம் ஆண்டு யூலை மாதம் 23 ம் தேதியில் நண்பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரப் படிவங்கள் வழங்கப்படும்.

து. இராஜேந்திரா,
தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம், கொழும்பு 2,
1970 ம் ஆண்டு மே மீ 8 ந உ.

7–283—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

## இலங்கை அரச கடற்படை

### துணிகள் சலவை செய்வதற்கான கேள்விகள்—1970/71

1970 ஆம் ஆண்டு ஒகரோபா மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு செபரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரைக்கும் கோ[illegible]டை, படை வீடு ஆஸ்பத்திரிககான துணிகள் சலவை செயவதறகான கேள்விப பத்திரங்கள ஒவ்வொரு சேவைககெதிரே காட்டப்பட்டுளள திகதிகளில காலை 10.00 மணி வரை கொழும்பு 1, [illegible] பெ. இல. 593, கொடி மர வீதி, இலஙகை அரச கடற்படை, கடற்படைத் தலைமை அலுவலகத்தில், கேளவித தலைவரால ஏற்றுக கொளளப்படும.

| 1<br>சேவை | 2<br>கேளவிப பத்திரங்கள வழங்கும கடைசிக் திகதி | 3<br>கேளவிப பத்திரங்கள் முடிவடையும் திகதி | 4<br>கேள்விப பத்திரங்கள் ஆரம்பிக்கப்படும் திகதி |
|---|---|---|---|
| (அ) கொழும்பில துணிகள் சலவை செயதல | 26.7.1970<br>பகல் : 12.00 | 27.7.1970<br>காலை : 10.00 | 27.7.1970<br>காலை : 10.30 |
| (ஆ) திருகோணமலையில துணிகள சலவை செயதல | 26.7.1970<br>பகல : 12.00 | 27.7.1970<br>காலை : 10.00 | 27.7.1970<br>காலை : 10.30 |
| (இ) வெலிசறையில துணிகள சலவை செயதல | 26.7.1970<br>பகல : 12.00 | 27.7.1970<br>காலை : 10.00 | 27.7.1970<br>காலை : 10.30 |
| (ஈ) காலிநகரில துணிகள சலவை செயதல | 26.7.1970<br>பகல : 12.00 | 27.7.1970<br>காலை : 10.00 | 27.7.1970<br>காலை : 10.30 |

விண்ணப்பகாரரின பண [illegible] நிதிநிலையைப பற்றிய முழு விபரஙகளுடன் சமாபபிக்கப்படும் மனுவின் பெயரில, மேற்கூறப்பட்டுள்ள சேவைகளுக்குரிய கேள்விப பத்திரங்கள் ஒவவொரு சேவைககெதிரே 2 ம் பிரிவில் காட்டப்பட்டுள்ள திகதிகளில் பகல 12.00 மணி வரை கொழும்பு 1, கொடி மர வீதியிலுள்ள [illegible] அரச கடற்படைத் தலைமை அலுவலகக கடற்படைத் தளபதியால வழங்கப்படும்.

கேள்விப பத்திரங்கள் வழங்கப்படுமுன் மேற்கூறப்பட்ட [illegible]வ்வொரு சேவைக்கும் திருமபப பெறககூடிய ரூபா 75/– வீதம் கட்டணம் செலுத்தப்படல வேண்டும். காசோலைகள் ஏற்றுக கொளளப்படமாட்டா. காசுக்கட்டளைகள் கடற்படைத் தளபதியின பெயரில எழுதப்பட[illegible] வேண்டும.

கேள்விய[illegible] கேள[illegible] பத்திரங்கள் கோரும்போது தங்கள் முழுப பெயர்களையும், முகவரிகளையும கொடுத்தல் வேண்டும். கேட்கப்பட்டால் அவர்கள் கொந்தராத்து நடத்துவதற்குத தங்களிடம ஆற்றல் உண்டெனபதற்கு போதிய சான்று அளித்தல வேண்டும்.

கேள்விப பத்திர விண்ணப்பகாரா தாஙகள விரும்பும் சேவைகளையும சேவை செயவதற்கு விரும்பும் ஸ்தானங்களையும அறிவித்தல் அவசியம்.

டீ. வி. ஹனரா,
கொமொடோா,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தளபதி,
தலைமை அலுவலகம,
இலஙகை, அரச கடறபடை, த. பெ. 593,
கொழுமபு 1,
1970 ம ஆண்டு யூன மீ 30 ந் [illegible]

7–102—10.7.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

## சுகாதாரத் திணைக்களம்—யாழ்ப்பாணப் பிரிவு

### அழுக்குத்துணி சலவை செய்தல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1970 ம ஆணடு அக்டோபர் மாதம 1 ந திகதி தொடககம 1971 ம [illegible] செப்தெமபர் மாதம 30 ந் [illegible] (இருநாட்களும உடபட) முடிய உளள காலம வரைககும கீழ்ககாணும அட்டவணையின முதலாம பந்தியிலுள்ள தாபனஙகளுககு அழுககுத்துணி சலவை செய்வதற்கான முத்திரை பொறிககப்பட்ட வெவ்வேறு கேள்விகளை இலஙகையா அலலது இலஙகையர் தொழில தாபனங களிடமிருந்து யாழபபாண சுகாதார சேவை அத்தியட்சகா ஏற்றுககொவவாா.

2. (i) **கேளவிககட்டுப் பணம்.**—கீழ்க்காணும அட்டவணையின 2 [illegible] பந்தியில குறிககப்படும வைப்புப்பணத்தை எந்த ஒரு [illegible]சசேரியிலோ எனது பெயரில் கட்டிப பற்றுச்சீட்டு பெறறுக்கொளளவும.

(ii) **கேள்விப பத்திரங்கள்.**—கேளவிப்பத்திரஙகள் கேளவிகள் முடிவடையும திகதிககு முதல நாள பகல் 12 மணிககு முன்பாக இவவலுவலகத்திலும, அலலது

| | | |
|---|---|---|
| அனுராதபுரம | [illegible] | மாத்[illegible] |
| பதுளை | கணடி | புத்தளம |
| மட்டககளப்பு | கேகாலை | இரத்தினபுரி |
| கொழும்பு | குருநாகல் | வவுனியா |
| காலி | மாத்தளை | |

[illegible] இடஙகளிலுள்ள சுகாதார சேவை அத்தியட்சகா அலுவலகஙகள[illegible] கொடுக்கப்படும. குறித்த [illegible] அனுப்பப்படாத கேளவிகள கவனத்திற்கு எடுததுக்கொளளப்படமாட்டா.

கேள்விப்பத்[illegible] விண்ணப்பஙகளுடன கேளவிககட்டுப்பணம பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல வேண்டும்.

[illegible] கேளவிக்காரர்கள, கேளவி முடிவடையும் காலத்துககுள் சமர்ப்பிப்பதற்கு ஏற்றதாக நேரகாலத்தோடு விணணப்பஙகளை அனுப்பவேண்டும்.

(3) **பெறுமதி விபரஙகள்.**—கேள்விப்பத்திரஙகளுககு விண்ணப்பம செயயுமுன கேளவிகள் முடியடையும் திகதிககு முன்னா் தங்க[illegible] பெறுமதி விபரங்க[illegible] எனக்கோ [illegible] அவாகள் கேள்விப்பத்திரஙகள பெற்றுக்கொளள [illegible] சுகாதார சேவை அத்தியட்சகருககோ தெரிவித்தல் வேண்டும்.

[illegible] விபரங்களையோ அல்லது [illegible] அளிககத்[illegible] கேள்விககட்டுப்ப[illegible]த்தை இழக்க நேரிடும.

(4) **சலவை செய்யவேண்டிய துண்டுகளின் விபரஙகள்.**—[illegible] சலவைசெயய வேண்டிய துண்டுகளி[illegible] உத்தேசததொகை [illegible] அட்டவணையின் 5 ம பந்தியில கொடுககப்பட்டுள்ளன.

(5) **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல[illegible] கேள்விகளையும் இணைப்பட்ட[illegible] சுகாதார சேவை [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேல மூலையில சேவையின தன்மையும [illegible] கீழ் மூலையில் அனுப்புபவரின பெயரும முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக்கொண்டுள்ள உறைகளைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம், அல்லது அவைகளை இந்த அலுவலகத்தி லிருக்கும் கேள்விப்பெட்டிக்குள் போடலாம் அல்லது என்னிடமோ அல்லது செயலாளர்/கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக் கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

(6) **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் 6 வது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதி காலை 10 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

(7) **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர் களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியை நுனித்தாய அனுமதிக்கப்படுவர்.

(8) **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி எச்சூழ் நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

(9) **பிணைவைப்புப் பணம்.**—கேள்விகள் ஒப்புக்கொள்ளப்பட்டதிலிருந்து 10 நாட்களுக்குள் தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர்கள் இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் தரப்பட்டிருக்கும் பிணைவைப்புப் பணத்தைச் செலுத்தியபின்னர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

(10) **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்திலிருக்கும் கேள்வி நிபந்தனைகளைப்படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்கவேண்டும்.

(11) **வேறு விபரங்கள்.**—(i) களஞ்சிய அறை, மின்சாரம், நீர் ஏனைய வசதிகள்—களஞ்சிய அறை, மின்சாரம், நீர் ஏனையவசதிகள் பெறப்படின் அச்சலுகைகளுக்கான செலவை அவ்வூர்ப் பெரும்பாக இறைவரி அதிகாரியினால் கணிக்கப்பட்ட விகிதப்படி மாதாந்தம் ஒப்பந்தக்காரரின் மாதாந்த உறுதிச்சீட்டிலிருந்து அறவிடப்படும்.

(ii) **அழுக்குத்துணிகளைக் கிருமிநாசினி செய்யவேண்டியதற்கான போக்குவரத்துக்கட்டணம்.**—அழுக்குத்துணிகளைச் சலவைசெய்யுமுன் கிருமிநாசினி செய்யவேண்டி நேரிடின் தாபனங்களிலிருந்து கிருமிநாசினி நிலையத்துக்கு எடுத்துக்கொண்டு திரும்பக்கொண்டுவருவதற்கான போக்குவரத்துக் கட்டணம் கொடுபடமாட்டாது.

(iii) **உள்ளூராட்சிப் பகுதியிலுள்ள நிலையங்களுக்கான கேள்விப்பத்திரங்கள்.**—உள்ளூராட்சி நிலையங்களுக்கான கேள்விகளை அவ்வுள்ளூராட்சி விதிகளுக்கு—ஏதும் உண்டானால்—அமையச் சலவைச்சாலைகள் நடாத்துபவர்களே விண்ணப்பிக்கலாம்.

(iv) கேள்விக்காரர்கள் விரும்பினால் ஒரு பகுதிக்கு அல்லது எல்லாப் பகுதிகளுக்கும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம், ஆனால் குறிக்கப்பட்ட தொகையைக் கட்டுப்பணமாகக் கேள்விப்பத்திரம் அனுப்பும் ஒவ்வொரு பகுதிக்கும் செலுத்தவேண்டும்.

| 1<br>தாபனம் | 2<br>கேள்விப் பத்திரக் கட்டுப்பணம்<br>ரூபா | 3<br>பிணை வைப்புப்பணம்<br>ரூபா | 4<br>மாதாந்தம் சலவை செய்யவேண்டிய தடவைகள் | 5<br>மாதாந்தம் சலவை செய்யவேண்டிய துணிகளின் சராசரித் தொகை | 6<br>கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| **அரசினர் வைத்தியசாலை, காங்கேசன்துறை :** | | | | | |
| பிரிவு 1—ஆண்கள் (வைத்தியசிகிச்சைக்களம்) பெண்கள் (வைத்திய சிகிச்சைக்களம்) வெளிநோயாளர் பகுதி, எக்ஸ கதிர்ப்பகுதி, ஆய்வுகூடம், பிரசவ சிகிச்சைக்களம், சத்திர சிகிச்சை மண்டபம், சமையலறை, பல் வைத்திய கூடம், தாதிமார் விடுதி, ஆண்கள் மனநோய் சிகிச்சைக்களம், பெண்கள் மனநோய் சிகிச்சைக்களம் .. | 50 .. | 100 .. | 4 .. | 2,200 | |
| பிரிவு 2—சிகிச்சைக்களம் 1 (ஆண்கள் கயரோக சிகிச்சைக்களம்) .. | 50 .. | 100 .. | 4 .. | 700 | |
| **பெரிய வைத்தியசாலை, யாழ்ப்பாணம் :** | | | | | |
| பிரிவு 1—1 ம் 2 ம் இலக்க பிரசவ சிகிச்சைக்களங்கள் 11 ம் இலக்க பிள்ளைகள் சிகிச்சைக்களம் .. .. .. | 50 .. | 100 .. | 15 .. | 23,000 | |
| பிரிவு 2—3 ம் 4 ம் இலக்க பெண்கள் சத்திர சிகிச்சைக்களங்கள், 5 ம் இலக்க பெண்கள் உடல்நோய் சிகிச்சைக்களம், 6 ம் இலக்க பெண்கள் முறிவு தறிவு சிகிச்சைக்களமும் காது மூக்கு தொண்டை நோய் சிகிச்சைக்களமும் 18 ம் இலக்க ஆண்கள் சத்திர சிகிச்சைக் களம் .. .. .. | 50 .. | 100 .. | 4 .. | 9,000 | |
| பிரிவு 3—10 ம் இலக்க பெண்கள் வைத்திய சிகிச்சைக்களம், 12 ம் இலக்க பெண்கள் கண் நோய் சிகிச்சைக்களம், 14 ம் இலக்க ஆண்கள் வைத்திய சிகிச்சைக்களம், 17ம் இலக்க ஆண்கள் சத்திர சிகிச்சைக்களம், எக்ஸ் கதிர் இயக்க மத்தி உள் விவகார மருந்துச் சாலை, இரத்தவங்கி, வெளிநோயாளர்கள் மத்தி கண் சிகிச்சை நிலையம், காது மூக்கு தொண்டை சிகிச்சை நிலையம், தாதிமார்கள் தலைவி விடுதி தாதிகார்கள் விடுதி, குசினி ஏனையதும் .. | 50 .. | 100 .. | 4 .. | 12,000 | |
| பிரிவு 4. சத்திரசிகிச்சை அறை .. .. .. | 50 .. | 100 .. | 15 .. | 11,200 | |
| பிரிவு 5–7 ம் இலக்க பணம் கட்டும் சிகிச்சைக்களம், 8 ம் இலக்க முறிவு தறிவு சிகிச்சைக்களம், 9 ம் இலக்க ஆண்கள் கண்நோய் சிகிச்சைக் களம், 10 ம் இலக்க மார்புநோய் சிகிச்சைக்களம் .. | 50 .. | 100 .. | 4 .. | 7,100 | |

சுகாதார சேவை அத்தியட்சகர்
அலுவலகம், யாழ்ப்பாணம்,
1970 ம் ஆண் யூன் மீ 30 ந உ.

சி. இராசரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

7–393—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

B 5

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## இலங்கை அரச கடற்படை

### உபயோகிக்கத் தகாத பொருட்களின் ஏலவிற்பனை

கீழே கொடுக்கப்படும் உபயோகிக்கத் தகாத பொருட்களின் ஏலவிற்பனை ஒன்று 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு மா. ம. இலங். சே. " றங்கல்ல " கொச்சிக்கடை, இலங்கை அரச கடற்படை, கொழும்பு 13 இல் நடைபெறும்.

இந்த ஏலவிற்பனைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன் அதாவது 1970 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணி முதல் 10.00 மணிவரை பார்வையிடுவதற்கு கிடைக்கக் கூடியதாகவிருக்கும்.

ஏலம் மூலமாக விற்பனை முடிவுற்ற அந்த நேரமே முழுப் பணமும் இறுக்கப்படுவதோடு, விலைக்கு வாங்கப்பட்ட பொருட்கள் அன்று பி.ப. 4.00 மணிக்கு முன் அப்புறப்படுத்தப்படவும் வேண்டும்.

தலைமை அலுவலகம்,
இலங்கை அரச கடற்படை,
கொழும்பு,
1970 ம் ஆடு யூன் மீ 22 ந வ.

ட. வீ. ஹன்சர்,
பதில் கடற்படைத் தளபதி.

27 அடி உள்ள திமிங்கில வேட்டைக் கப்பல், பலவகைக் குழாய்கள், 6 ம், 12 ம் கொண்ட வோல்ற்ஸ் பட்டரிகள், தள்ளு வண்டில்கள், சிங்ஸ், மோட்டார் உறுப்புக்கள், தலையணைகள், நீராடும் குழாய்கள், கீழ்த்தர மட்டத் தொட்டிகள், எஃகுத் தட்டுக்கள், நீர்ப்பேசின்ஸ், அலுமினியத் தட்டுக்கள், குடுகைகள் முதலியன.

7–305—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914.

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## வவுனியா மாவட்ட சாராயத் தவறணை குத்தகை விற்பனை—1970/71

### 1.10.70 தொடக்கம் 30.9.71 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட சாராயத் தவறணைகளின் 1.10.70 தொடக்கம் 30.9.71 வரைக்குமான கால எல்லை வரை சில்லறையாக சாராயம் விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்துவரும் பொது விதிகளுக்கமையவும் 17.4.70 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட 14,902 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் சாராயத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் " வவுனியா மாவட்ட சாராயக்குத்தகை 70/71 " என்று குறிப்பிட்டு 1970 ம் ஆண்டு யூலை மாதம் 29 ம் திகதி காலை அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்திற்குமுன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தவறணைக்கும் தனித்தனிக் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். எவரும் எந்த ஒரு தவறணைக்காவது ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விப்பத்திரங்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்பமுடியாது.

4. கேள்விக்காரர் :

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கிறதோ அப்பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில் ;

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியின் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்திற்குக் குறைந்தால், அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(ஒன்றுக்கு மேற்பட்ட தவறணைக்குக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கும் கேள்விக்காரர் அதே வேளையில் அதே ஆண்டுக்குரிய வேறு தவறணைக்கு கேள்விப்பத்திரத்துடன் பெறுமதி அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதியை அணைத்திருந்தால் அப்பத்திரத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை இணைக்கலாம். அத்தகைய ஒவ்வொன்றிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுமதிப்பத்திரப் பிரதி, மூலப்பிரதி இணைக்கப்பட்ட தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் கொண்ட குறிப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும்).

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கலாம் அல்லது வவுனியா கச்சேரியில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்குத் தாக்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 1,500 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரி பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும்.

7. எந்த ஒரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ, நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரமே உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக்கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தில் தவறணைக்காகத் தெரிவு செய்யப்படுகிறார் என்பதையும் வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

வவுனியா 3 ம் இலக்க சாராயத் தவறணை தற்போது இருக்கும் இடத்தில் இவ்வருடமும் இருக்கமாட்டாது.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவேண்டுமாயின் வவுனியா கச்சேரிக்கு மனுப்பண்ணிக் கேட்டுக்கொள்ளவும்.

அட்டவணை

வவுனியா மாவட்ட சாராயத்தவறணை விற்பனை 1.10.70—30.9.71.

| இலக்கமும் இடமும் | தவறணைக்குரிய உள்ளூர் பகுதி | கேள்விகள் முடிவடையும் நேரம் |
|---|---|---|
| 1. முல்லைத்தீவு | முல்லைத்தீவு பட்டினசபைஎல்லைக்குள் | காலை 10.00 |
| 2. மாங்குளம் .. | மாங்குளம் கிராமத்தில் .. | காலை 10.30 |
| 3. வவுனியா .. | வவுனியா நகரசபை எல்லைக்குள் .. | காலை 11.00 |

ஆ. பெருமையினார்,
மேலதிக அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா,
1970 ம் ஆடு யூன் மீ 30 ந் திகதி.

7–403—10.7.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,914

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் | 5. 6.70 | வெள்ளி | 29. 5.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 11. 6 70 | வியாழன் | 5. 6.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 18. 6.70 | வியாழன் | 11. 6.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 25. 6.70 | வியாழன் | 18. 6.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| யூலை | 2. 7.70 | வியாழன் | 25. 6.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 10. 7.70 | வெள்ளி | 2. 7.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 17. 7.70 | வெள்ளி | 10. 7.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 24. 7.70 | வெள்ளி | 17. 7 70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 31. 7.70 | வெள்ளி | 24. 7.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் ඩ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் நிலைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.